KAALAI KATHIR 10 JAN 2010

# கரூரில் மரக்கன்று நடும் இயக்கம் இன்று துவக்கம்

**கரூர்:** கரூரில் இன்று ஈஷா அறக்கட்டளையின் பசுமைக்கரங்கள் சார்பில், 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி 'பசுமைக்கரூர் இயக்கம்' துவக்க விழா நடக்கிறது.

பசுமைக்கரங்கள் சார்பில் மாநிலம் முழுவதும் 11.4 கோடி மரம் நட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்தாண்டு பசுமை திருப்பூர் இயக்கம் துவங்கி 28 ஆயிரம் மரக்கன்று நடப்பட்டது. அதன்தொடர்ச்சியாக கரூரில் இன்று 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் இயக்கம் துவங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நேற்றுமுன்தினம் கரூர் பிரேம் மஹாலில், கவிதை மற்றும் ஓவிய போட்டி நடந்தது.

அன்று மாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் பங்கேற்கும் பசுமை ஊர்வலம் பிரேம் மகாலில் துவங்கி கரூர் ஜவகர் பஜார் வரை நடந்தது.

பி.ஜி.பி., கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் நடந்தது. கரூரில் இன்று நடக்கும் விழாவில் 10 ஆயிரம் மரக்கன்று நடுவதற்கான விழாவை சத்குரு துவக்கிவைக்கிறார். கலெக்டர் உமாமகேஸ்வரி, எஸ்.பி., தினகரன் மற்றும் பலர் கலந்து பங்கேற்கின்றனர்.

மரக்கன்றுகள் நடப்பட்டு, பாதுகாப்பு வலை அமைத்து, இரண்டு ஆண்டுகள் வரை ஈஷாவின் தன்னார்வ தொண்டர்கள் கரூரில் தங்கி பராமரிக்கவுள்ளனர். மரக்கன்று அனைத்தும் மூன்று மாதங்களில் நட்டு முடிக்கப்படும்.

கரூரில் உப்புத்தன்மை தண்ணீரை சமாளித்து வளரக்கூடிய மரக்கன்றுகள் நடப்படுகிறது. மஞ்சள் கொன்றை, சரக்கொன்றை, கனகசெம்பா, மகிழம், வேம்பு, ஆகாஷ்மல்லிகை, புங்கன், இயல்வாகை, தூங்குவாகை உள்ளிட்ட 23 வகை மரக்கன்று நடப்படுகிறது.

ஏற்பாடுகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், கரூர் ஈஷா மைய ஒருங்கிணைப்பாளர் முத்துசாமி, தகவல் தொடர்பு பொறுப்பாளர் பாலச்சந்திரன் உள்ளிட்டோர் செய்கின்றனர்.


பசுமைக் கரூர் இயக்கம்

பசுமையான, தூய்மையான, ஆரோக்கியமான நகரத்தினை நோக்கி...

isha

10,000 மரக்கன்றுகளை நட்டு அவற்றை 2 வருடங்களுக்கு பராமரிக்கும் செயல்திட்டம்

மரம் நடும் துவக்க விழா
கொண்டாட்டம்

நாள் : 10 ஜனவரி 2010 மாலை 5.00க்கு
இடம் : பிரேம் மஹால், கரூர்



தலைமை

டாக்டர். திருமதி. J. உமாமகேஸ்வரி, I.A.S.,

மாவட்ட ஆட்சி தலைவர், கரூர்

சிறப்புரை ஆற்றி துவக்கி வைக்க வருகிறார்

சத்குரு அவர்கள்

"மரங்களின் வெளிமூச்சு மனிதர்களுக்கு உள்மூச்சு. மனிதர்களின் வெளிமூச்சு மரங்களுக்கு உள்மூச்சு.
இது ஒரு இடையறாத தொடர்பு.
இந்தத் தொடர்பை யாராலும் துண்டிக்க முடியாது.
இந்தத் தொடர்பு இல்லாமல் மனிதர்களால் வாழவும் முடியாது."
-சத்குரு

ஊர்கூடி மரம் வளர்ப்போம்! அனைவரும் வாருங்கள்!!

மேலும் தகவல்களுக்கு: 94431 64663, 97900 30575, 0422-2580155